## தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கமத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத்

தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) கமத்தொழில் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கியிருக்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தேவைப்பாடுகளுக்கு முரணான சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/18 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பு இலக்கம் (III) இன் கீழுள்ள பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றானது திறைசேரியினால் வழங்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றுடன் இணங்கியிருக்க வேண்டிய போதிலும், 46 செலவு விடயங்கள் திறைசேரியின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை விட ரூபா 11,646,088,159 மொத்த தொகையான பொறுப்புக்கள் அதிகரித்தும் 07 செலவு | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 சனவரி முதல் வாரத்தின் பின்னர் இனங்காணப்பட்ட பொறுப்புக்கள் திறைசேரிக்கு அறிக்கையிட முடியாமை மற்றும் ஏனைய திணைக்களங்களின் மாவட்ட செயலகங்களின் பொறுப்புக்களுக்கும் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்ட பொறுப்புக்களுக்குமிடையே வித்தியாசம் காணப்படலாம். |

விடயங்களின் ரூபா 60,039,001 மொத்த தொகையான பொறுப்புக்கள் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

### 1.6.2 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான ரூபா 744,166 மொத்த தொகையான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அனைத்து பொறுப்புக்களையும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆலோசனைகள் வழங்கப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் அப்பிரிவுகளால் சமர்ப்பிக்கப்படாததால் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிஏற்பாட்டு எல்லைகளை மிகைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்தலாகாது என்ற போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட சேமிப்புக்களை மிகைத்து 24 செலவு விடயங்களுக்காக ரூபா 29,272,839 கூட்டு மொத்தமான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |
| (இ) பசளை நிவாரண செலவு விடயத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,449,889,412 தொகையான சேமிப்புக்களை மிகைத்து ரூபா 8,390,327,962 தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பொறுப்புக்களுள் பசளை நிவாரணமாகச் செலுத்த வேண்டிய மூன்றாம் மற்றும் | - மேற்படி - | - மேற்படி - |

நான்காம் காலாண்டுகளுக்கான பொறுப்புக்கள் உறுதியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொறுப்புக்கள் பதிவேடு | | |
| அமைச்சினால் நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் ஒரு பொறுப்புக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் ஒரு பொறுப்புக்கள் பதிவேட்டைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொறுப்புக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

**1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கை தீர்த்துவைப்பது தொடர்பான கூற்று**

இது சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து முறையே ரூபா 268,061 மற்றும் ரூபா 240,267 தொகைகளை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடன் கோவைகள் அல்லது தனிப்பட்ட கோவைகள் இல்லாததன் காரணமாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்தது. கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சில கடன் மீதிகளைப் பதிவழிப்பதற்காக திறைசேரியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் | ஓய்வூதியங்களைத் தயாரித்தல் இடம்பெறாமையின் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 222,625 தொகையான இடர்கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தியாயத்தின் 4.2.5 மற்றும் 4.4 ஆம் பந்திகளின் பிரகாரம் அறவிட வேண்டிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காரணமாக இக்கடன் மீதியை இதுவரை தீர்த்து வைக்க முடியாதிருந்தது. |
| (இ) | இடர்கடன் மற்றும் ஆதன கடனைப் பெற்றுக் கொள்ளும் போது இரத்துச் செய்ய முடியாத நிபந்தனைகளுக்கு உத்தியோகத்தர்கள் கையெழுத்திட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். |

## 1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| பீடீ/சீபீடீ/4/1/23 - 2015 ஆம் இலக்க 2015 மார்ச் 31 ஆந் திகதிய நிதி அமைச்சு சுற்றறிக்கை | 796,208 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக கஹன்தேவெல விவசாய கிராம தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரசார நடவடிக்கைகளுக்காக பத்திரிகைகளில் கடிதத்தை பிரசுரிப்பதற்கு ரூபா 796,208 செலவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு பத்திரிகைகளின் மூலம் பிரச்சார நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. |
| 11/2015 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 06 | 1,470,223 | சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வமான விழாக்களை நடாத்துவதனை மட்டுப்படுத்துதல் மற்றும் | - மேற்படி - | - மேற்படி - |

| | |
|---|---|
| ஆம் பந்தி | செலவுகளை குறைக்கும் வகையில் விழாக்களை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், கஹத்தேவெல விவசாயக் கிராம தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் விழாவிற்காக ரூபா 1,470,223 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 மூலதன செலவு விடயங்கள் மற்றும் 03 மீண்டுவரும் செலவு விடயங்களுக்கான ரூபா 28,530,000 தொகையான நிதிஏற்பாடுகள் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | பல சந்தர்ப்பங்களில் அமைச்சு பதவி மாற்றமடைந்தமை, மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமைக்கு காரணமாக இருந்தது. |
| (ஆ) | 06 செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 642,264,809 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அந்த நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைத் திருத்தத்தின் அடிப்படையில் நிதிஏற்பாட்டினை பயன்படுத்துதல் குறைவடைந்தமை ஆண்டின் இறுதியில் போதிளயவு கட்டுநிதி கிடைக்காமை, ஆண்டின் போது நிலவிய சாதகமற்ற காலநிலை என்பவற்றின் காரணமாக உத்தேசிக்கப்பட்ட சில செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமை சேமிப்புக்களுக்கு காரணமாக இருந்தமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் வருடாந்த பெறுகைத் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலிருந்து பெறுகைத் திட்டத்தினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அமைச்சிற்கு குத்தகை அடிப்படையில் ஒரு அலுவலகக் கட்டிடத்தைப் பெற்றுக் கொள்ளல் | | |
| (அ) கட்டிடங்களை நிர்மாணிப்பதற்குரிய அங்கீகரித்த திட்டததின் பிரகாரம் 07 மாடிகளாக இருந்தும் 09 மாடிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. கட்டிடத்தை வாடகைக்கு எடுத்துக் கொள்ளும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற சட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுதல் கட்டிட உரிமையாளரின் செயற்பாடாகும். |
| (ஆ) அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கு இணங்க கட்டிடங்களின் சந்தை வாடகை மாதம் ரூபா 13.5 மில்லியனாக இருந்தும் அதனை மிகைத்து ரூபா 21 மில்லியன் வாடகை செலுத்துவதற்கு இணங்கி கொள்ளப்பட்டது. | - மேற்படி - | பிரதம மந்திரியின் அலுவலகத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் நிபந்தனைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 835(2)(உ) மற்றும் 03 பிரிவுகளின் பிரகாரம் குத்தகை கால எல்லை உச்சஅளவு 03 ஆண்டுகளாக இருக்க வேண்டிய போதிலும், அது 05 ஆண்டுகள் கால எல்லை வரை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 03 ஆண்டுகளின் பின்னர் குத்தகை வாடகையை 15 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு இணங்கி கொள்ளப்பட்டது. அவ்வாறே 02 ஆண்டுகளின் குத்தகை வாடகையான ரூபா 360 மில்லியன் பணத்தை ஒரே தடவையில் செலுத்துதல் மற்றும் மூன்றாம் நான்காம் ஆண்டுகளின் போது எதிரீடு செய்வதற்கான நிபந்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைச்சரவையின் அங்கீகாரம் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கியுள்ள நிபந்தனைகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | கட்டிடங்களின் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாத 2016 ஏப்ரலிலிருந்து 2017 யூலை மாதம் வரையான காலத்திற்கு வாடகை மற்றும் குத்தகைப் பணமாக ரூபா 275,211,000 தொகையும் சேவைக் கட்டணமாக ரூபா 90,000,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ளும் போது வாகனங்களை நிறுத்தி வைக்கும் வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கும் மேலதிகமாக கட்டிடத்தை அலுவலகமாகப் பேணுவதற்கும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் ரூபா 260,845,487 செலவு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பசளை செயலகம் | | |
| (i) | இறக்குமதி செய்யப்படுகின்ற பசளைகளின் தரத்தை சான்றுப்படுத்தும் பரிசோதனைகள் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் ஆய்வுகூடத்தில் அல்லது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆய்வுகூடத்தில் மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் தனிப்பட்ட 04 ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிட மிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | 1988 இன் 68 ஆம் இலக்க பசளைகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரச்சட்டத்தின் 12(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் இயலுமை காணப்படுகின்றது. |
| (ii) | அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் ஏனைய பயிர்ச்செய்கைகளுக்காக பசளைகள் இறக்குமதி செய்வதற்காக ஒவ்வொரு கம்பனிக்கும் பசளை நிவாரண கூப்பன்களை வழங்குவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்தும் அவ்வாறான ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | குழுவை நியமிப்பதற்காக உரிய குழுவின் அங்கத்தவர்களுக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளது. இலங்கைக்கு நேரடி இரசாயன பசளைகளை இறக்குமதி செய்கின்ற தனியார் பசளை கம்பனிக்கு மாத்திரம் நிவாரண பசளை கூப்பன்கள் வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | நிவாரணப் பணத்தை செலுத்தும் போது அமைச்சினால் கணனி தரவு முறைமை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதனை மேம்படுத்துவதற்கு ரூபா 800,000 செலவு செய்யப்பட்டிருந்தும் பசளை நிவாரணத்தை செலுத்தும் போது குறைபாடுகள் இடம்பெற்றிருந்தன. அந்த முறைமையிலுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற முறைமைக்கு இணங்கவும் உடன்படிக்கையின் பிரகாரமும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தரவு முறைமையை உருவாக்கிய கொழும்பு பல்கலைக்கழகத்தால் சேவைக் கட்டணமாக ரூபா 800,000 வேண்டப்பட்டிருந்ததனால் பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கை இடம்பெறுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பசளைகளின் தரங்களை சான்றுப்படுத்துவதற்காக உரிய பசளை இருப்புக்களின் மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் போது பசளை செயலகத்தால் ஈடுபடுத்தப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நடைமுறைகள் எடுத்திருக்கவில்லை. | காணப்படுகின்ற முறைமையை மேம்படுத்துதல் வேண்டும். | எதிர்காலத்தில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (v) | பசளைகளை இறக்குமதி செய்யும் போது அரசாங்கத்தின் மற்றும் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்படுகின்ற பணத்தை கொடுப்பனவு செய்யும் போது அதிகளவு பணப் பெறுமதியுடனான கொடுப்பனவுகள் இடம்பெறுவதனால் அதன் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை வழங்குவதற்காக முறைப்படியான வேலைப்பகிர்வும் கணக்காளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற முறைமையை மேம்படுத்துதல வேண்டும். | எதிர்காலத்தில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | உலக வங்கியின் கடன் உதவியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துகின்ற விவசாயப் பிரிவினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் ஒழுங்குபடுத்தியிருந்த இஸ்ரவேல் ஆய்வுச் சுற்றுலாவிற்காக அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 16 ஆக இருந்தும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை 17 ஆகக் காட்டி நிதி முகாயையாளரும் அதில் உள்ளடக்கியிருந்தார். 2018 ஆகஸ்ட் மாதத்தின் போது செயற்திட்ட நிதியிலிருந்து ரூபா 1,075,918 பணம் சுற்றுலாவிற்காக செலவு செய்யப்பட்டிருந்தும் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி உரிய உத்தியோகத்தர் | அங்கீகரித்த முறைமையில் நடவடிக்கை எடுத்து ஆய்வு நடவடிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் செயற்திட்டத்திற்கு சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய ஆய்வுச் சுற்றுப் பயணத்திற்காக அப்போதிருந்த விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் கௌரவ அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது எனவும் உரிய உத்தியோகத்தரின் நியமனக் கடிதத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒரு கலண்டர் மாதம் அறிவித்தலின் பின்னர் சேவையிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார் எனவும் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்திலிருந்து விலகியுள்ளனர். | | |
| (இ) | விவசாயப் பிரிவினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம்<br>----------------------------------------------------------- | | |
| (i) | செயற்திட்டத்தின் தகவல்களை உள்ளடக்கி இணைய தளத்தை உருவாக்குவதற்காக ஒப்பந்தக் கம்பனிக்கு ரூபா 480,000 செலுத்தப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களுக்கு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய முறைமையில் நாளதுவரையாக்கிய தரவுகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இணையத் தளத்தை நாளதுவரையாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக்கணக்காய்வு அவதானிப்புக்கள் சம்பந்தமாக தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் அதனை நாளதுவரையாக்கி வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும் கருத்து தெரிவிக்கின்றேன். |
| (ii) | 2016 யூன் 06 ஆந் திகதிய செயற்திட்ட மதிப்பீட்டு அறிக்கையின் 34 ஆம் பிரிவின் பிரகாரம் Agriculture Technology Demonstration Park இனை உருவாக்குவதற்கான ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக International Sevice Provider நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அவ்வாறு செய்வதற்கு தாமதித்ததன் அடிப்படையில் அந்த கூறுகளுக்குரிய செயற்பாடுகளை உள்நாட்டு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆலோசனை நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றி ரூபா 840,187,484 செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ஆலோசனைகளுக்கும் குறிக்கோள்களுக்கும் இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு உடன்படிக்கை செய்வதற்கான கலந்துரையாடல் 2019 யூன் 11 ஆந் திகதி ஆரம்பிக்கப் பட்டிருந்ததுடன் அதற்கிணங்க உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்காக உலக வங்கியின் இணக்கப்பாடும் அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டு 2019 ஆகஸ்ட் மாதமளவில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். |
| (iii) | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் அப்பதவிகளில் குறுங்கால எல்லைக்குள் கடமைகளை நிறைவேற்றி விலகியிருந்ததுடன் அதற்கிணங்க நடவடிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கும் குறிக்கோள்களுக்கும் இணங்க நடவடிக்கை எடுத்தல் | ஆரம்பத்தில் காணப்பட்ட விசேடத்துவமான பதவிகளில் சேவையாற்றுவதற்காக ஆலோசகர்கள் நியமிக்கப் பட்டிருக்காததுடன் |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படாது செயற்திட்டத்தில் சேவையாற்றிய ஏனைய உத்தியோகத்தர்களால் கடமைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. அது ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலுக்கு நேரடியாகத் தாக்கமளித்துள்ளது. | வேண்டும். | நியமிக்கப்பட்ட ஆலோசகர்களுக்கு தனியான கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. |
| (iv) | விவசாய பயிற்சிகள் மற்றும் இயலளவு அபிவிருத்திக்காக ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்ட பயிற்சிக் கையேடு மற்றும் செயற்பாட்டுப் புத்தகத்தை அச்சிடுவதற்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 28,639,133 செலவு செய்யப்பட்டிருந்தும் 2018 மே 13 ஆந் திகதி வரை விவசாயிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற முறைமைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிரதான பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விவசாய பயிற்றுவிப்பாளர் களுக்காக 2019 ஆம் ஆண்டில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. 2018 திசெம்பர் 29 ஆந் திகதி பயிற்சிக் கையேடு அச்சிடப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் சிரேஷ்ட மட்ட பதவிகளிலுள்ள 21 வெற்றிடங்கள், மூன்றாம் மட்டத்திலுள்ள பதவிகளில் 4 வெற்றிடங்கள், இரண்டாம் மட்ட பதவிகளில் 273 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள பதவிகளில் 18 வெற்றிடங்களாக 316 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடங்களுக்காக பதில் கடமை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பசளை செயலகத்தின் பணிப்பாளர் பதவி, 2017 ஏப்ரல் 11 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டிருந்தும் நியமன அதிகாரியாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சிபார்சின் பிரகாரம் அப்பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு 2019 மே மாதம் 20 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற முறைமைக்கு இணங்கியிருத்தல் வேண்டும். | பதவியுயர்வு நடைமுறையினைத் தயாரித்து அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். |